தஞ்சாவூர், இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையரின்

செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திருமதி. கோ. கவிதா, பி.ஏ., பி.எல்.,

உதவி ஆணையர் (கூ.பொ)

செ.மு.ந.க.எண். 5245 / 2023 / அ6 / நாள் : 24.11.2023

பொருள் : அறங்காவலர் நியமனம் - பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர் நியமனம் - 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் (திருத்தப்பட்ட சட்டம் 39/96 மற்றும் அவசரச் சட்டம் 15/2006-ன்படியும்) சட்டப்பிரிவு 49(1)-ன் கீழ் பரம்பரை அல்லாத அறங்காவலர்கள் நியமனம் - அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் - வெண்டாக்கோட்டை - பட்டுக்கோட்டை வட்டம் - தஞ்சாவூர் மாவட்டம் - உத்தரவு பிறப்பித்தல் தொடர்பாக.

பார்வை : 1) ஆய்வாளர், பட்டுக்கோட்டை அறிக்கை ந.க.எண். 148 / 2023 நாள் 19.08.2023 (ம) 22.11.2023

2) தஞ்சாவூர் மாவட்டக்குழு தீர்மானம் எண். 45 / நாள் : 24.11.2023

...

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் சட்டப்பிரிவு 49(1)-ன் கீழ் விளம்புகை செய்யப்பட்ட தஞ்சாவூர் உதவி ஆணையர் பிரிவிற்குட்பட்ட பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும்.

பார்வை 1-ல் காணும் பட்டுக்கோட்டை சரக ஆய்வாளர் குறிப்பின் மூலம் இத்திருக்கோயிலுக்கு இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 26-ன் படி விண்ணப்பதாரர்களிடம் விசாரணை மேற்கொண்டு அவர்கள் தகுதி குறைபாடுகள் இல்லாதவர்கள் என அறிக்கை அனுப்பியுள்ளார்.

இவ்வறிக்கையினை பரிசீலித்தும், பார்வை 2-ல் காணும் தஞ்சாவூர் மாவட்டக் குழு தீர்மான பரிந்துரையினை ஏற்றும், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், வெண்டாக்கோட்டை, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு கீழ்காணும் மூன்று நபர்களை பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்களாக நியமனம் செய்து ஆணையிடப்படுகிறது.

1) திருமதி. நா. கோவிந்தம்மாள்,
த/பெ. நாகராஜன்,
எண். 150, கீழத்தெரு,
வெண்டாக்கோட்டை,
பட்டுக்கோட்டை வட்டம்.

2) திரு. கோ. புருஷோத்தம்மன்
த/பெ. கோவிந்தவேளாளர்
305/8A. மேலத்தெரு,
வெண்டாக்கோட்டை பட்டுக்கோட்டை வட்டம்.

3) திருமதி. தேவிகா,
க/பெ. செல்லபாண்டியன்,
237- தெற்குத் தெரு,
வெண்டாக்கோட்டை, பட்டுக்கோட்டை வட்டம்.

மேற்கண்டவாறு நியமனம் செய்யப்பட்ட பரம்பரையல்லா அறங்காவலர்கள் அறங்காவலர் குழுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து இரண்டு ஆண்டுகாலம் பதவி வகிப்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இத்திருக்கோயிலுக்கு பரம்பரை முறைவழிசாரா அறங்காவலர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள், தான் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான உறுதிமொழி அளித்து, உரிய பதிவேட்டில் கையொப்பமிட்டு அறங்காவலர் பதவியினை ஏற்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இத்திருக்கோயிலுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள 3 அறங்காவலர்களிலிருந்து ஒருவரை அறங்காவலர் குழு தலைவராக தேர்வு செய்ய இவ்வுத்தரவு நாளிலிருந்து 30 நாட்களுக்குள் சட்ட விதிகளின்படி சிறப்பு அறங்காவலர்கள் குழு கூட்டத்தினைக் கூட்டி ரகசிய வாக்கெடுப்பு முறையில் அறங்காவலர்கள் குழு தலைவர் தேர்தலை நடத்தி அறங்காவலர் குழு தலைவரை தேர்ந்தெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சரக ஆய்வாளருக்கு உத்தரவிடப்படுகிறது.

24/11/2023

உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.

24/11/2023

பெறுநர் :

1) திருமதி. நா. கோவிந்தம்மாள்,
க/பெ. நாகராஜன்,
எண். 150, கீழத்தெரு,
வெண்டாக்கோட்டை,
பட்டுக்கோட்டை வட்டம்.

2) திரு. கோ. புருஷோத்தம்மன்
த/பெ. கோவிந்தவேளாளர்
305/8A. மேலத்தெரு, வெண்டாக்கோட்டை.
பட்டுக்கோட்டை வட்டம்.

(த.பி.பா)

3) திருமதி. தேவிகா,
க/பெ. செல்லபாண்டியன்,
237- தெற்குத்தெரு, வெண்டாக்கோட்டை,
பட்டுக்கோட்டை வட்டம்.

4) தக்கார் / செயல் அலுவலர், அருள்மிகு சுப்ரமணியர் திருக்கோயில், வெண்டாக்கோட்டை, பட்டுக்கோட்டை வட்டம். (இ) அருள்மிகு துர்க்கையம்மன் திருக்கோயில், பாலத்தளி.

5) ஆய்வாளர், இந்து சமய அறநிலையத்துறை, பட்டுக்கோட்டை.
(சார்பு செய்து ஒப்புதல் வழங்க கேட்டுக் கொள்ளப்படுகிறது)

நகல் பணிந்தனுப்பப்படுகிறது :-

6) ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை.
7) இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, தஞ்சாவூர்.
8) மிகை.

தகவல் பெறும் உரிமைச் சட்டம்
2005ன் வகைமுறைகளின் கீழ்
வழங்கப்பட்ட தகவல்கள்